# கத்தியின்றி ரத்தமின்றி புதினத்தில் சமூக ஒடுக்குமுறை

***முனைவர் கு. ஜெயசித்ரா***
உதவிப் பேராசிரியர்
கல்வித்தந்தை ஏ.கே.ஆர். சௌராஷ்ட்ரா ஆசிரியர் கல்லூரி
சிவகங்கை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6430

***முன்னுரை***

*கிறித்தவ படைப்பாளர்களுள் ஒருவரான மாற்கு சமயத்திற்குள்ளும் சமயம் சாராமலும் சமூகத்தில் நடைபெறும் ஒடுக்குமுறைகளை புதினங்களாக்கியவர் ஆவார். அவருடைய பல படைப்புகள் தலித் மக்கள் மீதான ஒடுக்குமுறையைப் பற்றி பேசுவனவாக அமைந்துள்ளன. அவருடைய மறியல் புதினம் தலித் கிறித்தவர்கள் கடுமையான அரசமைப்பின் தாக்குதல்களை சந்திக்கும் விதத்தைப் பற்றி விவரித்துள்ளார். சுவர்கள், வருவான் ஒருநாள், யாத்திரை, எப்படியும் என்பன போன்ற புதினங்களில் கிறித்தவ சமயத்திற்குள் நிலவும் ஒடுக்குமுறை பற்றி எடுத்துரைத்துள்ளார். அவருடைய கத்தியின்றி ரத்தமின்றி புதினம் சமூகத்தில் உள்ள பாலின, சாதிய ஒடுக்குமுறையினைப் பற்றி எடுத்துரைக்கும் புதினமாக அமைந்துள்ளது. இக்கட்டுரை இப்புதினத்தின் மையக் கருத்தாக அமைந்துள்ள அமைதி வழியில் வன்முறையை எதிர்கொள்ளும் விதம் பற்றி கூறப்படுகிறது.*

**கத்தியின்றி ரத்தமின்றி கதைச் சுருக்கம்**

அமைதி வழியில் ஏழைகளுக்காகவும் அவர்களது உரிமைகளுக்காகவும் போராடும் இளைஞர்கள் அரசின் பார்வையில் தீவிரவாதிகளாகத் தென்படுகின்றனர். அவ்வாறு அவர்கள் ஏழை மக்களை ஒன்று திரட்டி போராட்டங்களில் ஈடுபடும் போது செல்வமிக்கவர்களால் கிள்ளுக் கீரையைப் போல அழிக்கப்படுகிறார்கள் என்பதை புதினம் சுட்டுகிறது. இப்புதினத்தில் பாலன், தர்மன், கனகராஜ், அமல் முத்தம்மாவின் அண்ணன் குமார் ஆகியே இளைஞர்கள் ஏழை மக்களின் உரிமைகளுக்காகப் போராடியதால் காவல் துறையினரால் தேடப்படும் தீவிரவாதிகளாக அறிவிக்கப்படுகின்றனர். அவர்கள் காட்டுக்குள் மறைந்து வாழும் நிலைக்கு ஆளாகின்றனர். அவர்களுடைய நண்பர்களான துரையும் பெருமாளும் காவலர்களால் இழுத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் செய்த தவறு ஏழை மக்களை திரட்டி உரிய கூலி கேட்டுப் போராடியதுதான். இது போல் ஊரில் உள்ள நாட்டாமை அல்லது தலைவர், கர்ணம் ஆகியோரும் அதிகாரம் மிக்கவர்களாக பெண்கள் மேல் ஆதிக்கம் செலுத்துபவர்களாக இருக்கிறார்கள்.

முத்தம்மாள், பாலன், ஆகியோரிடையே காதலும் ஏற்படுகிறது. ஆனால் முத்தம்மாள் காவல் அதிகாரி ஒருவனால் வன்கொடுமை செய்யப்படுகிறாள்.

பாலன், கனகராஜ், பெருமாள் ஆகியோர் காடுகளுக்குள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை காவலர்கள் பிடித்து விட முனைகின்றனர். அவர்களிடம் சிக்காமல் காட்டுக்குள் வாழ்க்கை நடத்துகின்றனர். இதில் முத்தம்மாள் அவளுடைய தந்தை சூசை ஆகியோர் ஊரின் நாட்டாண்மையால் பழி வாங்கப்படுவதும் அதனால் அவள் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பதும் அவளைக் காப்பாற்றி பாலன் தன்னுடன் சேர்த்துக் கொள்வதும் என கதை கூறப்படுகிறது. முத்தம்மாளின் தந்தை சூசை ஏழை மக்களை ஒன்று திரட்டி கூலி கூடுதலாக வேண்டும் என்று போராட்டம் நடத்தியதன் விளைவாகவே அவரை சூழ்ச்சி செய்து கொன்று விடுகிறார்கள். ஆனால் முத்தம்மாள் நடத்தை சரியில்லாத காரணத்தால் தந்தை கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார் என ஊராரை நம்ப வைத்து அவளை மொட்டையடித்து இழிவு செய்கின்றனர். இதனால் மனம் வெதும்பிய முத்தம்மாள் இறந்து விட தீர்மானித்து கிணற்றில் குதிக்கிறாள். பாலன் அவளைக் காப்பாற்றுகிறான். அவனுடைய கூட்டாளிகளுடன் சேர்ந்து அவளை மானபங்கம் செய்த நாட்டாண்மையை கொன்று விடுகின்றனர். ஊருக்குள் அவர்கள் வராமல் காவல்துறை தேடுகிறது. பாலன், குமார், தர்மன் ஆகியோர் ஊருக்குள் முத்தம்மாளைக் காண வருவதும் போவதுமாக இருப்பதை அறிந்து முத்தம்மாளை பகடையாக வைத்து அவர்களைப் பிடிக்க எண்ணுகின்றனர். காவலர்களிடம் சிக்கிக் கொள்ளக் கூடாது என்று ஓடும் போது தர்மனைப் பிடித்து சித்திரவதை செய்கின்றனர். குமார் முத்தம்மாவின் அண்ணன் வெளியூரில் வேலைக்குச் சென்று திரும்பியவன் தன் தங்கைக்கு நேர்ந்த கதியை எண்ணி வருந்துகிறான். பாலன், தர்மன், அமல் ஆகியோருடன் சேர்ந்து கொண்டு அடக்கு முறைக்கு எதிராகக் களமாடுகிறான். எனினும் வன்முறைப் பாதையைக் கைவிட வேண்டும் எனக் கூறுகிறான். அவர்கள் அனைவரும் நாட்டாண்மையைக் கொன்ற வழக்கில் தேடப்படும் நக்சலைட்டுக்களாகக் கூறப்படுகிறார்கள். பெரியசாமி ஊரில் பெரும் நிலக்கிழார் அவரிடம் நிலத்தைக் குத்தகைக்கு எடுதது பயிர் செய்பவர்களிடம் அநியாயமாக விளைச்சலைப் பெறும் பேர்வழியாக இருக்கிறான். அவனால் தான் சூசை கொல்லப்படுகிறார். அவனைப் பழி வாங்க வேண்டும் என்று குமார், அமல் ஆகியோர் பேசுகின்றனர். காட்டுக்குள் இருக்கும் பாலனுக்கு முத்தம்மாவின் நினைவு மேலிடுகிறது. அவளைச் சந்திக்க தேக்கு மரக் காட்டிற்குச் செல்கிறான். அங்கு திட்டப்படி காவல்துறை ஆய்வாளர் அவர்கள்இருவரையும்பிடித்துவிடுகின்றார். பாலனை மரத்தில் கட்டி வைத்து கூட்டாளிகளை காட்டிக் கொடுக்குமாறு கூறுகிறான் காவல் ஆய்வாளர் ஆனால் அவன் பேச மறுக்கிறான். அவனை பேச வைப்பதற்காக முத்தம்மாளை மானபங்கம் செய்கிறான். அதைக் காண சகியாமல் தலையைக் குனிந்து கொண்டான். காவல் ஆய்வாளரை கொடுமைப்படுத்தி சாகடிக்க வேண்டும் என பாலன், அமல், கனகராஜ் ஆகியோர் தீர்மானம் போடுகின்றனர். குமார் அதைத் தடுத்து அவரை விடுதலை செய்து விடச் சொல்கிறான். அப்படியே காவல் ஆய்வாளரை விட்டு விடுகின்றனர். ஆனால் முத்தம்மா காவல் ஆய்வாளர் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துத் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்து விடுகிறாள். அவனால் தான் கற்பிழந்ததாக எண்ணி அவ்வாறு செய்கிறாள். குமார், பாலன், கனகராஜ், அமல் ஆகியோர் ஊர் மக்களைத் திரட்டி கொடுமைகளுக்கு எதிராகப் போராடத் தீர்மானிக்கின்றனர். அநியாய வட்டி வாங்கும் பெரியசாமி, கர்ணம் ஆகியோருக்கு பாடம் புகட்ட எண்ணுகின்றனர். பெரியசாமியைக் கொல்ல

வேண்டும் என்பதை விட அவர் திருந்தி மக்களை கொடுமைப்படுத்தாமல் இருந்தால் போதும் என்று ஊர் மக்களைத் திரட்டுகிறான் குமார் போராட்டத்தின் போது காவலர்களை வரவழைத்து தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்க கர்ணம் நினைக்கிறான். எனவே காவல் ஆய்வாளருக்கு மொட்டைக் கடிதம் எழுதுகிறான். ஆனால் காவல் ஆய்வாளர் வரவில்லை. ஊரார் திரண்டு கூட்டமாகச் செல்லும் போது பெரியசாதியை கல்லால் எறிகிறான் ராஜப்பா உடனே பெரியச ாமியின் ஆட்கள் கற்களை கூட்டத்தினர் மீது எறிகின்றனர். மக்கள் காயமடைகின்றனர். பெரும் கலவரம் மூழ்கிறது. போராட்டம் தோல்வியடைகிறது. குமார் தான் மீண்டும் ஊருக்குச் செல்வதாக முடிவெடுக்கிறான். ஆனால் நண்பர்களை அவனை செல்ல விடாமல் தடுக்கின்றனர். தங்கைக்குக் கல்யாணம் செய்து வைப்பதற்காகத்தான் வந்ததாகவும் அவளே இறந்துவிட்ட பின்ப தான் இங்கு இருப்பது வீண் என்றும் கூறுகிறான். ஆனால் அவனது நண்பர்கள் அவனை ஊருக்குச் செல்ல விடாமல் மக்களை வதைக்கும் பெரியசாமி, கர்ணம் ஆகியோருக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கூறுகின்றனர். குமார் வன்முறைச் செயல்களை தவிர்க்க எண்ணுகிறான். ஆனால் பெரியசாமியை அவர்கள் சுட்டுக் கொல்கிறார்கள். அந்தப் பழியும் சேர்ந்து அவர்களை காவலர்கள் துரத்த வழி செய்கிறது. காவலர்கள் நண்பர்கள் தங்கியிருந்த மரவீட்டை முற்றுக்கையிட்டு அவர்களைச் சுட்டுக் கொல்கின்றனர். குமார் தானும் தப்பித்து ஓட எண்ணுகிறான். உயர்சாதிக்காரர்கள் சேர்ந்து கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களை துரத்துகின்றனர். அடிக்கின்றனர், கொல்கின்றனர். அவர்களுக்காக தானும் சேர்ந்து கொண்டு செல்கிறான். அங்கு குமார் கர்ணத்தால் வெட்டிக் கொல்லப்படுகிறான். இவ்வாறு கதையில் போராட்டம், உயர்சாதியினரின் ஒடுக்கு முறை, பாலின ஒடுக்குமுறை. புரட்சியில் ஈடுபடவோரை அரசுக் காவல் துறை ஒடுக்குவது என அமைக்கப்பட்டு உள்ளது.

## சமூக ஒடுக்குமுறை

மனிதர்கள் பண்பாட்டாலும் நாகரிகத்தாலும் வளர்ச்சி பெற்றிருந்த போதிலும் இன்றைக்கும் மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வுகளும், வேறுபாடுகளும் கடைபிடிக்கப்படுகின்றன. சாதிய, சமய, பாலின, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் மக்கள் அடக்குமுறைக்கும் ஒடுக்குதலுக்கும் உள்ளாகி வருகின்றனர். அத்தகைய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதைக் காணமுடிகிறது. இந்த நாட்டின் எந்த நலனும் வளர்ச்சியும் சொகுசும் தீண்டாமல் செய்த வேலைக்கான கூலியாக பழைய உணவினை எதிர்பார்த்தபடி வீடு வீடாகச் சென்று மன்றாடிக் கொண்டிருந்த மனிதர்கள் குப்பையைப் போலவே வீசி யெறியப்பட்டிருந்தனர் (ஜெயராணி, ஜாதியற்றவளின் குரல், ப.33) என்ற ஜெயராணியின் கூற்று மக்களில் பெரும்பாலோர் ஒடுக்குமுறைக்கும் ஆதிக்கச் சாதியினரின் அடுக்குமுறைக்கும் உள்ளாக்கப் பட்டிருக்கின்றவர்கள் தம் உழைப்புக்கான கூலியைக் கூட பெற முடியாதவர்களாக உணவிற்காக உயர்குடியினரின் தயையை எதிர்பார்த்தவர்களாக இருப்பதை சுட்டுகிறார். செய்து வந்த செய் தொழில் வேற்றுமையாகள் காரணமாக தாழ்ந்த சாதியினராக ஒதுக்கப்பட்டனர். இழிவான தொழில்கள் என்று கருதப்பட்ட சமுதாயப் பணிகளை செய்து வந்ததன் காரணமாக ஒதுக்கப்பட்டவர், தீண்டத் தகாதவர் என்ற அன்றைய அடிமை எசமானர்கள் சமுதாயம் அவர்களுக்குப் பெயர் சூட்டியது. அதன் தொடர்ச்சி இன்றும் நீடிக்கிறது (கே.முத்தையா, தமிழ் இலக்கியம் ஒரு புதிய பார்வை, ப.76) என்ற கூற்றானது சாதிய ஏற்றத் தாழ்வு, இழிவு ஆகியன

காலங்காலமாக இந்திய, தமிழ்ச் சமூகத்தில் நிலைபெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

## ஒடுக்குமுறையும் அதற்கு எதிரான போராட்டமும்

மாற்குவின் கத்தியின்றி ரத்தமின்றி புதினமானது புரட்சியாளர்கள் என்று கருதப்படுகின்ற இளைஞர்கள் மக்களை ஒன்று திரட்டி போராட்டத்தை நடத்து கின்றனர். அடித்தட்டு மக்களை அவர்கள் ஒன்று திரட்டுவதைக் கண்டு பதைத்த உயர்சாதியினர் அவர்களுக்கு எதிராக காவல் துறையினை ஏவுகின்றனர். அவ்விளைஞர்களில் சிலர் உயிர்த்தியாகம் செய்கின்றனர். நாவலூர் என்னும் கிராமத்தில் பெரிய சாமி என்னும் நிலக்கிழாரிடமும் நாட் டாண்மையிடமும் கர்ணம் போன்ற அதிகாரம் கொண்டவர்களிடமும் மக்கள் நாள்தோறும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். தம் உழைப்பிற்கேற்ற ஊதியம் கொடுக் காததைக் கண்டித்த சூசையாவை ஆள் வைத்து கத்தியால் குத்திக் கொன்று விட்டு கிணற்றில் தூக்கிப் போட்டு விடுகின்றனர் என்பதைக் காணமுடிகிறது. அவருடைய மகள் முத்தம்மாவின் மீது அடாத பழியினைச் சுமத்தி அவளை அவமானப்படுத்துகின்றனர். அரிசன மக்கள் என்று கூறப்படுகின்ற மக்கள் தமக்கான உரிமையை போராடிப் பெற விளைகின்றனர். முத்தம்மா தன் தந்தை நிலக்கிழார் பெரிய சாமிக்கு எதிராக போராட முனைந்ததைப் பற்றி பாலனிடம் எடுத்துரைக்கிறாள் நாங்க அரிசனங்க. என்னுடைய அப்பா ரொம்ப நல்லவரு. எப்பப் பார்த்தாலும் யாருக்காவது ஏதாவது உதவி செஞ்சிக்கிட்டே இருப்பாரு. எங்க ஆளுககிட்ட அவருக்குக்கிட்ட ரொம்ப மதிப்பு. நாட்டாண்மையாக் கூட இருக்கச் சொன்னாங்க. எங்க அப்பாதான் மாட்டேன்னு சொல்லிட்டாரு. இருந்தாலும் எங்க அப்பாவைக் கேக்காம தெருவுல ஏதும் நடக்காது. எங்க ஊரு நாவலூர். எங்க ஊர் மேல் சாதிக்காரர்களிடம் தான் நிலமெல்லாம் இருக்கு. அவர்களிடம் தான் நாங்க வேலை செய்றோம். (கத்தி.24) என்று கூறுகிறாள். மேலும் அவளுடைய தந்தை நிலத்தில் பணி செய்பவர்களுக்குத் தரப்படும் கூலியானது மிகக் குறைவாக இருந்தது, மேல் சாதிக்காரர்கள் விவசாய சங்கம் என்று வைத்துக் கொண்டு ஏழை மக்களின் உழைப்புக்கு அவர்கள் தான் ஊதியம் நிர்ணயித்தனர். இதைக் கண்ட சூசை விவசாயத் தொழிலாளர்களைக் கூட்டிக் கொண்டு தனியாக சங்கம் ஒன்று அமைத்தார். அதன் மூலம் மக்களைத் திரட்டி போராட்டங்களில் ஈடுபட்டார். குறைந்தபட்ச கூலி சட்டங்களை அறிந்துகொண்டு அதன்படி கூலி கொடுக்கும்படி கேட்டார். எல்லோருக்கும் ஒரே சந்தோஷம். இந்தச் சட்டப்படி கூலி கேட்கனும்னு முடிவு செய்தாங்க. எங்க அப்பா எல்லா ஆட்களையும் ஒன்று சேர்த்து கூலி விவசாயிகள் சங்கம்னு ஒன்ன ஆரம்பிச்சாரு. பிறகு சங்கத்தின் பெயரால் தாசிதல்தார், போலிஸ் அதிகாரிங்க, கலெக்டர் எல்லாத்துக்கும் மனப் போட்டாங்க. ஊருல இருக்கிற நியாயமற்ற குறைந்த கூலி கொடுக்கும் முறையை மாத்தி அரசாங்கம் நிர்ணயித்த கூலியைக் கொடுக்க ஏற்பாடு செய்யனும்னு மனுவுல குறிப்பிட்டாங்க. (கத்தியின்றி.25) என்று முதலாளிகளின் ஏமாற்றி வேலை வாங்கும் நிலைக்கு எதிராக சட்டமுறைப் படி நடவடிக்கை எடுத்தார். இதனால் சினம் கொண்ட முதலாளிகள் பெரிய சாமியைத் தீர்த்துக் கட்டி விடத் தீர்மானித்தனர். இவரது செயலினால் ஊரில் உள்ள மக்களுக்கு வேலை கொடுக்காமல் வெளியூரிலிருந்து வேலைக்கு ஆட்கள் அழைத்து வருகின்றனர் அறுவடை நெருங்குச்சு. உயர்ந்த சாதிக்காரங்க பக்கத்து ஊருல போய அறுவடைக்கு ஆடகளைக் கூப்பிட்டாங்க. ஆனா எங்களுக்குச் சாதகமா பக்கத்து ஊர்க்காரங்களும்இருந்தாங்க. வேலைக்கு யாரும் வரல. (கத்தியின்றி.26) என்று முதலாளிகளின் செயல்களுக்கு

பக்கத்து ஊர்க்காரர்களும் ஒத்துழைக்கவில்லை என்பது கூறப்படுகிறது.

பின்னர் முதலாகள் அடக்குமுறை சார்ந்த செயல்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தனர். மக்கள் குடியிருந்த குடிசைகளைத் பிரித்து எறிந்தனர். ஆக்ரமிப்பு நிலமென்று அதற்குக் காரணம் கூறினார்கள். அப்போது முத்தம்மாளின் அப்பா சூசை ஊரில் இல்லை. வந்ததும் குடிசைகள் பிரிக்கப்பட்ட மையைக் கண்டதும் சினம் கொண்டார். எல்லோரையும் திரட்டிக் கொண்டுக் கொண்டு பிரித்தக் கூரைகளை எல்லாம் திரும்ப கொண்டு வந்து குடிசைகளைப் போட வச்சாரு. யாராவது பிரிக்க வந்தால் வெட்டி விடுவதாக மிரட்டினார். முதலாளிகள் இறங்கி வருவது போல சூசையிடம் இரண்டாயிரம் கொடுத்து அனைவரையும் வேலைக்கு வரச் சொன்னார். அவரும் அதன்படியே அனைவருக்கும் பணத்தைப் பிரித்துக் கொடுத்து வேலைக்கு வரச் சொன்னார். நெல் அறுவடை முடிந்ததும் நெல்லை யாரும் தூக்கிச் செல்ல விடக் கூடாது என்றும் சாதகமான முடிவு வரும்வரை இது அவர்கள் நெல்லை கொண்டு போக விடக் கூடாது என்றும் கூறினார். பின்னர் முதலாளிகள் சூசையை அழைப்பதாகக் கூறி வரவழைத்து காவல் துறையினரைக் கொண்டு அவரை அடித்துத் துன்புறுத்தினர் அவுங்க எங்க அப்பாவப் பிடிச்சு காலுல கயிற்றைக் கட்டி அப்படியே மரத்துல தலைகீழாகக் கட்டித் தொங்கப் போட்டு அடி அடின்னு அடிச்சாங்க. ஏண்டா கூலி உயர்வாடா வேணும் இந்தா வாங்கிக்கோன்னு அடிச்சாங்க. தாங்க முடியாத வலி இருந்தாலும் கூலி உயர்வு கேட்பதாகவே எங்க அப்பா சொன்னாரு. தலைகீழாகக் தொங்கிக் கிட்டு இருக்கும் போதே கயிறு இரண்டையும் அறுத்துவிட்டாங்க. அப்பா கீழே விழுந்தாரு. தலையில அடிபடக் கூடாதுன்னு கையைக் கீழே ஊனுனாரு. கை இரண்டும் ஒடிஞ்சு போச்சு. இருந்தாலும் உறுதியுடன் இருந்தாரு. இது அவுங்க கோபத்தைத் தூண்டிச்சு மாட்டுக்கு லாடம் அடிக்கிறது மாதிரி இவனுக்கும் லாடம் அடிச்சாத்தான். சொன்னபடி கேட்பான்னு சொல்லி காலுல லாடம் அடிக்க ஆரம்பிச்சாங்க. வேதனை பொறுக்க மாட்டாம கத்தினாரே தவிர அவுங்க சொற்படி கேட்க மாட்டேன்னு சொல்லிட்டாரு. (கத்தியின்றி.27-28) என்று தன் தந்தையை முதலாளிகள் கொடுமைப்படுத்திய போதும் மனஉறுதியுடன் அவர்களின் சொற்படி கேட்க மறுத்தார் எனக் கூறுகிறாள் முத்தம்மா. பின்பு அவளை மானபங்கப்படுத்தப் போவதாக அவரை மிரட்டினார்கள். அப்போதும் உறுதியுடன் இருக்கவே லாடம் கட்டியபடியே அவரைத் தூக்கி கிணற்றில் போட்டார்கள். அவர் தற்கொலை செய்ததாகக் கூறினார்கள். அதற்குக் காணரமாக மகள் வேசியானது பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறினார்கள் என்று பாலனிடம் கூறுகிறாள்.

இக்கதையைக் கேட்டதும்தான் அவர்களைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று பாலனும் அவனது கூட்டாளிகளும் பிரசிடென்டை கொலை செய்கிறார்கள். தீர்க்க விசாரித்ததில் மேற்கூறிய குற்றச்சாட்டுக்கள் உண்மை என்று தெரிய வந்துள்ளது. இத்தகையச் சமூக விரோதச் செயலைச் செய்ததற்காக இவர் சாகும் வரை கத்தியால் குத்திக் கொல்லப்பட வேண்டும் என்று மக்கள் மன்றம் தீர்ப்புக் கூறுகிறது. (கத்தியின்றி.50) என்று ஊர்த் தலைவரை கொலை செய்வதற்காகத் தமக்குத் தாமே ஒரு நீதி மன்றத்தை ஏற்படுத்திக் கொண்டு அவர் செய்த குற்றங்களைப் பட்டியலிட்டு தண்டனையையும் நிறைவேற்றுகின்றனர். அடுத்த வினாடி மாறி மாறி பிரசிடெண்ட்டை குத்தினார்கள். கழுத்து, முகம், நெஞ்சு, வயிறு என்று மாறி மாறிக் குத்தினார்கள். (கத்தியின்றி. 50) என்று அடக்குமுறைக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளும் விதம் பற்றி புதினத்தில் கூறப்படுகிறது. இது போல் நாவலூரரைச் சேர்ந்த பெரியசாமி, காவல் அதிகாரிகள் என்று கொடுமைப் படுத்தும் மேல்சாதியினரைக் கொலை

செய்கின்றனர். போராட்ட வழிமுறையில் குமாரினால் சில மாற்றங்களை செய்தாலும் அது நிறைவேறுவதில்லை. நான்கு இளைஞர்களும் காவல் துறையினராலும், உயர்சாதியினராலும் கொல்லப்படுவதுடன் முடிவடைகிறது.

சமூகத்தில் பல்வேறு அடக்கு முறைகள் மக்கள் மீது திணிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அதற்கு எதிரான மனநிலை எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. ஆனால் அரசு படைகள், பணம் ஆகியவற்றால் எளிய மக்களின் போர்க்குணம் நொறுக்கப்படுகிறது என்பது இதில் விளங்குகிறது.

## முடிவுரை

மாற்கு எழுதிய புதினங்களில் சமூகத்தில் ஒரு சாரார் உயர்ந்த சாதியினராக இருந்து கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களை விலங்குகளைப் போல நடத்துகின்றனர் என்பதையும் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை பல்வேறு வகையில் சித்திரவதைக்கு உள்ளாக்குகின்றனர் என்பதையும், ஆண் என்றால் அடித்துத் துன்புறுத்துவதும் பெண் என்றால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குவதுமென நடைபெறுவதை எடுத்துரைக்கிறார். போராட்ட குணமுள்ள இளைஞர்கள் மக்களைத் திரட்டி போராடுவதை அடக்குவதற்காக அவர்கள் மேல் தீவிரவாத முத்திரை குத்துகிறார்கள். அதன்படி அவர்கள் அழிக்கப்படுகிறார்கள். சமூக ஒடுக்குமுறை வேறு வடிவில் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. பெரும்பான்மையான மக்கள் போராட்டத்தின் மூலம் இதனை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்பதை வலியுறுத்துவதாக புதினம் அமைகிறது.